F, 784

# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

### பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமாப் பரீட்சை (முழு நேரம்) 2016/2017

### முதலாம் பருவம்

### CU 501 – கல்வியின் தத்துவம் மற்றும் சமூகவியல் அடிப்படைகள்

**நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

பகுதி 'அ' விலிருந்து முதலாம் வினா உட்பட இன்னும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி 'ஆ' விலிருந்து ஆறாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்கும் விடை தருக. எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு பகுதிக்கான விடைகள் வெவ்வேறு புத்தகங்களில் எழுதப்பட்டுத் தனித்தனியாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

முதலாம் மற்றும் ஆறாம் வினாக்களுக்கு 20 புள்ளிகள் வீதமும் ஏனைய வினாக்களுக்கு 15 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

#### <u>பகுதி 'அ' - கல்வியின் தத்துவ அடிப்படைகள்</u>

1\. i. கல்வியின் எண்ணக்கரு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் பல்வகையினவாக அமைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கு கூறுக.

(04 புள்ளிகள்)

ii. 'தத்துவவியலானது கல்வியில் தங்கியுள்ளது' இக்கூற்றினை நியாயப்படுத்துவதற்குப் பொருத்தமான காரணங்கள் இரண்டு தருக.

(04 புள்ளிகள்)

iii. பயன்பாட்டுவாதிகள் எடுத்துக்காட்டியதன்படி விருத்திசார்முறையாதென்பதை எடுத்துக்காட்டி அதன் அடிப்படைப் படிமுறைகள் நான்கினைக் கூறுக.

(04 புள்ளிகள்)

iv. 'இலட்சியவாதத்தின் அடிப்படையில் உலகில் இடம்பெறுவன பெறுமானங்களாக அமைகின்றன' இங்கு பெறுமானம் என்பதன் பொருள் யாது?

(04 புள்ளிகள்)

v. தோமஸ் லிகோனா முன்வைத்த விளைதிறனுள்ள குணவியல்புக் கல்வியின் கோட்பாடுகள் இரண்டு தருக.

(04 புள்ளிகள்)

2. i. இலட்சியவாதக் கோட்பாட்டுச் சிந்தனையின் அடிப்படைக் கருத்தினைச் சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. இலட்சியவாதக் கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் சமகாலக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதிலுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.

(08 புள்ளிகள்)

3. i. 'கல்வியை யதார்த்தபூர்வமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிரியர் ஒருவருக்கு கோட்பாட்டு விளக்கம் இருத்தல் வேண்டும்.' இக்கருத்தின் உண்மை பற்றி உங்கள் கருத்தினை எடுத்துக்காட்டுக.

(07 புள்ளிகள்)

ii. கல்வித்தத்துவம் என்பதால் கருதப்படுவது யாது என்பதை எடுத்துக்காட்டி இதன் செயற்பாடுகளைப்பற்றி விபரிக்குக.

(08 புள்ளிகள்)

4. i. கற்பித்தல் தொடர்பான மரபுவழி மற்றும் நவீன கருத்துக்களை ஒப்பீட்டு அடிப்படையில் மதிப்பிடுக.

(07 புள்ளிகள்)

ii. அறிவுச் சமூகம் (knowledge society), ஒன்றாக வாழ்வதற்கு கற்றல் (Learning to live together) ஆகிய எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

5. i. மகாத்மா காந்தியின் கோட்பாடுகளையும் கல்விசார் கருத்துக்களையும் விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. மகாத்மா காந்தியின் சிந்தனைகள் இருபத்தோராம் நூற்றாண்டுக்குப் பொருந்தும் விதத்தை விளக்குக.

(08 புள்ளிகள்)

## பகுதி 'ஆ' - கல்வியின் சமூகவியல் அடிப்படைகள்

06. பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை தருக.

i. பாடசாலையில் முறையில் குழுக்களின் செயற்பாடுகளை இனங்காண்பதற்கான வழிமுறைகள் இரண்டு கூறுக.

ii. சமூக அடுக்கமைப்புப் பற்றிய தொழிற்பாட்டுவாதம் மற்றும் மாக்சியவாதம் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு யாது?

iii. சமூக அசைவியக்கத்தை அளவிடும் முறைகள் இரண்டு கூறுக.

iv. சமூக மாற்றம் பற்றிய கருத்துகள் நான்கினைப் பெயரிடுக.

v. பாடசாலை மாணவரில் சமவயதுக்குழு உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை எடுத்துக் காட்டுக.

(4x5=20 புள்ளிகள்)

7. i. சமூகமொன்றிலே கலாசாரமானது காலத்திற்கேற்ப மாற்றமுறுகிறது என்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. பாடசாலையின் மூலம் கலாசாரம் பரிமாற்றப்படும் விதத்தையும் அதில் ஆசிரியர் ஏற்கவேண்டிய பொறுப்பையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

8. i. கல்விச் செயற்பாடுகளுடன் சமூகமயமாதல் பல்வேறு அளவில் தொடர்புகொள்ளும் விதத்தை ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் எடுத்துக் காட்டுக.

(07 புள்ளிகள்)

ii. கல்விக்கும் சமூகநகர்வுக்கும் இடையிலுள்ள தொடர்புபற்றி எடுத்துக்காட்டி கல்வியினால் சமூகநகர்வு நிகழும் முறையை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

9. i. ஆசிரியர் வகிபங்கின் இயல்பைத் தீர்மானிக்கும் சமூகம்சார் காரணிகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. ஆசிரியர் வகிபாகம் தொடர்பான பிரச்சினைக்குரிய காரணங்களையும் மற்றும் பிரச்சினைகளின் வகைகளையும் அறிமுகஞ்செய்து அவற்றுக்குப் பொருத்தமான தீர்வுகளையும் முனவைக்குக.

(08 புள்ளிகள்)